# முதலியாண்டான்
# வாழி திருநாமம்

அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே
அருட்பச்சை வரணத்தில் அவதரித்தான் வாழியே
சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
சீபாடியம் ஈடு முதல் சீர் பெருவோன் வாழியே
உத்தமமாம் வாதூலம் உயர வந்தோன் வாழியே
ஊர் திருந்தச் சீர்பாதம் ஊன்றினான் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடி பெறுவோன் வாழியே
முதலியாண்டான் பொற்பாதங்கள் ஊழிதொறும் வாழியே

சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
ஸ்ரீரங்கராஜர் அடி சிந்தை செய்வோன் வாழியே
பக்தியுடன் பதின்மர் கலை பரிந்தளிப்போன் வாழியே
பாதுகையாய் அதிபதி தாள் பதிக்குமவன் வாழியே
முக்தி வரும் எட்டெழுத்தை மொழிந்தருள்வோன் வாழியே
முக்கோல் என்று எதிராசர் மொழி பெற்றோன் வாழியே
தத்துவ நூல் பாஷியத்தைத் தரித்துரைப்போன் வாழியே
தாசரதி உபய மலர்த் தாள் இணைகள் வாழியே

அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே
அநவரதம் எதிராசர் அடி தொழுவோன் வாழியே
சித்திரையில் புனர்வசு நாள் சிறக்க வந்தோன் வாழியே
ஸ்ரீபாஷ்யச் செழும்பொருளைச் செப்புமவன் வாழியே
பச்சைவாரணம் விளங்க பார்வை செய்தோன் வாழியே
பரகாலன் அடி இணைகள் பரவுமவன் வாழியே
உத்தம வாதூல குலம் உகந்துதித்தான் வாழியே
உய்துணை முதலியாண்டான் ஒண்பதம் இரண்டும் வாழியே

---